வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 24.09.2025 புதன்கிழமை | இதழ் : 267 | பக்கங்கள் : 08

# தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி உண்ணாவிரதப் போராட்டம்!

## நாளை முதல் 29ஆம் திகதி வரை முன்னெடுப்பு அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

**தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி நாளை 25ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை அடையாள சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்க வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த போராட்டத்தை செம்மணி வளைவு பகுதியில் நடத்தவிருக்கிறோம். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எமது உறவுகள் அங்கு வருகை தந்து ஒன்றிணைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.




நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் போராட்டம் செம்மணி வளைவுப் பகுதியில் ஆரம்பமாகி இரவு - பகலாக தொடர்ச்சியாக 29ஆம் திகதி மாலை 4 மணி வரை நடைபெறும்.

தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஒரு பொது அழைப்பாக கருதி அனைவரும் பங்கேற்று

07

## அமெரிக்கா பயணமானார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் இரவு நாட்டிலிருந்து புறப்பட்டார்.

இன்று அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் உரையாற்ற உள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க, ஐக்கிய

07

## ஜெனிவா செல்லும் நீதியமைச்சர்

கொழும்பு, செப். 24

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெறவுள்ள காணாமற்போனோர் தொடர்பான குழுவின் இலங்கையின் முதலாவது காலமுறை ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று பயணமாகிறார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெறும் இலங்கையின் முதலாவது ஆய்வுக்கூட்டம் இதுவாகும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், காணாமற்போனோர் தொடர்பான பிரச்னையில் இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள், அதன் சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அமைச்சர் நாணயக்கார விளக்கமளிக்க உள்ளார்.

இந்தக் கூட்டம், இலங்கையின் மனித


07

## தமிழ் மக்களின் கையொப்பம் ஐ.நா. வதிவிட பிரதிநிதியிடம்

கொழும்பு, செப். 24

ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ்சேயிடம் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டத்தில் பெற்றுக் கொண்ட கையொப்பங்கள் நேற்று கொழும்பில் கையளிக்கப்பட்டன.

07



## தேர்தல் ஆணைக்குழு சுதந்திரமாக செயல்பட நிதி சுதந்திரம் அவசியம்

### சமன் சிறி ரத்நாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 24

தேர்தல்கள் ஆணைக்குழு சுதந்திரமாகச் செயற்பட வேண்டுமானால் அதற்கு நிதி சுதந்திரம் இருக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர், தேர்தல் ஆணைக்குழுவின் அதிகார வரம்பு இல்லாததும் பிரச்னையாக உள்ளதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் உபுல் அபேவிக்ரம மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## நாட்டு மக்கள்தான் என் பெறுமதிமிக்க சொத்து!

### மகிந்த ராஜபக்ஷ பெருமிதம்

கொழும்பு, செப். 24

தாம் சேர்த்துள்ள "மக்கள்" என்ற சொத்து மற்ற எல்லா சொத்துகளையும் விடவும் பெறுமதி வாய்ந்தது எனவும் பல மக்களை சம்பாதித்துள்ளமையே தமக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில்

07

## அரசின் சேவைகளை இலகுவில் அணுகுவதற்கு பொது செயலி

கொழும்பு, செப். 24

பொதுமக்கள் அரச சேவைகளை இலகுவாக அணுக உதவும் வகையில் 'கவன்மெண்ட் சுப்பர்' என்ற செயலியொன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெவ்வேறு அரசத் திணைக்களங்களில் வெவ்வேறு அமைப்புகள், பல அங்கீகார செயல்முறைகள் மற்றும் மீண்டும் மீண்டும் தரவு

07

## தீர்வு குறித்து ஜனாதிபதியுடன் நேரில் பேச கேட்கிறது தமிழரசு

யாழ்ப்பாணம், செப். 24

தமிழர்களின் தேசிய இனப் பிரச்னை குறித்து நேரடியாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி தாருங்கள் என்று கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

"தமிழ்த் தேசியப் பிரச்னைக்கான தீர்வு" என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் வருமாறு:-

"நமது கட்சியின் சமீபத்திய மத்திய

07

## மின் விநியோகத்தை தொடர்ந்து உறுதி செய்வது அரசின் பொறுப்பு

### அமைச்சரவை பேச்சாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 24

மின்சார விநியோகத்தைத் தொடர்ச்சியாக உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து ஜனாதிபதி வெளியிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில், ஊழியர்களின் விடுமுறையை

07

## பிறந்து சிறிது நேரத்திலேயே உயிரிழந்த இரட்டை சிசுக்கள்

யாழ்ப்பாணம், செப். 24

பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை உயிரிழந்து பிறந்ததுடன் மற்றைய குழந்தை பிறந்து 45 நிமிடங்களில் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த நிமலராஜ் சாருமதி தம்பதிகளின் குழந்தைகளே இவ்வாறு உயிரிழந்தன.

குறித்த குழந்தைகளின் தாயாருக்கு கடந்த 21ஆம் திகதி இரவு திடீரென வலிப்பு ஏற்பட்டது. இந்நிலையில் யாழ். போதனா

07

## மின்சாரம் தாக்கியதில் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் - உடுவில் பகுதியில் இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார். மாதா கோவில் வீதி, உடுவில், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த விஷ்ணுராஜ் யதுர்மன் (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இளைஞன் நேற்றுக் காலை ஆடைகளை அயன் செய்து கொண்டிருந்தார். இதன்போது மின் இணைப்பில் இருந்த கோளாறு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபன் நினைவாக இரத்த தான முகாம்

யாழ்ப்பாணம், செப். 24

தமிழர் தாயகம் எங்கும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரம் உணர்வு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி "உயிர் கொடுத்த உத்தமனுக்காய் உதிரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தால் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான முகாம் இன்று காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை முன்னெடுக்கப்படவுள்ளது. சகலரையும் இதில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. (அ-05)

## வாள்வெட்டு சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்கள் குறித்து பொலிஸாரால் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியை சேர்ந்த நபர் நீண்ட காலமாக தலைமறைவாக இருந்துவந்த நிலையில் நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு முயன்ற வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (அ-05)

## சமன்லாலுக்கு பிணை

கொழும்பு, செப். 24

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மொறட்டுவை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சமன்லால் பெர்னாண்டோ பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 3 சரீரப் பிணைகளிலும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் சந்தேகநபரை செல்ல கொழும்பு தலைமை நீதிவான் அனுமதித்துள்ளார்.

# தியாகி திலீபனுக்கு சிலை அமைக்க இடம் தாருங்கள்


### வவுனியா மாநகர முதல்வருக்கு கடிதம்

வவுனியா, செப். 24

தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் சிலை வைப்பதற்கு இடம் தாருங்கள் எனக் கோரி வவுனியா வர்த்தகரான எஸ். சிவரூபன் வவுனியா மாநகர முதல்வருக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தமிழர்களுக்காக உன்னத இலட்சியத்திற்காக பல நாட்களாக பசி இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனுக்கு சிலை வைப்பதற்கு வவுனியாவில் இடம் ஒன்றை ஒதுக்கித் தாருங்கள் - என கோரப்பட்டுள்ளது.

கடிதத்தை ஏற்றுக்கொண்ட மாநகர முதல்வர் சு. காண்டீபன், குறித்த சிலையை வைப்பதற்கு இடம் கோரி தங்களால் தரப்பட்ட இக்கடிதத்தை மாநகர சபை அமர்வில் முன் வைப்பதாகவும் அத்தோடு இந்தக் கோரிக்கையை விடுக்கும் தாங்கள் வேறு சில நடைமுறைகளும் இருப்பதன் காரணமாக அதனையும் செயல்படுத்தி உரிய ஆவணங்களையும் பெற்றுத் தருமாறும் குறித்த வர்த்தகரிடம் தெரிவித்தார். (அ-10)



# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொது செயலாளராக ம.சசிகுமார்


யாழ்ப்பாணம், செப். 24

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த ம.சசிகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, தலைவராக மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைப் சேர்ந்த சி. சசிகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் இந்த தெரிவு இடம்பெற்றது.

நிதிச் செயலாளராக வடமராட்சியைச் சேர்ந்த கி. இந்திரன் தெரிவு செய்யப்பட்டதோடு, துணைத் தலைவர்களாக திருகோணமலையைச் சேர்ந்த இரா. சச்சிதானந்தம், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. அன்ரன் சேவியர், யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த திருமதி சசிகலா ஜெயராஜன், யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த திருமதி. அமலராஜ் புனிதசீலி ஆகியோரும் துணைப் பொதுச் செயலாளர்களாக மட்டக்களப்பைச் சேர்ந்த செ. சிவநடேஸ், தீவக வலயத்தைச் த. தயாபரன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.என்.ஜே.ஜே.பிகிறாடோ ஆகியோரும், துணை நிதிச் செயலாளர்களாக அம்பாறையை சேர்ந்த க. சந்திரகாசன், மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் உமாபிரியா ஆகியோரும், கல்வி கலாசார செயலாளராக தென்மராட்சி வலயத்தின் நா. கேதீஸ்வரனும் பத்திரிகைச் செயலாளராக புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த தெ. சுதர்சனும், பிரசார செயலாளராக மலையகத்தைச் சேர்ந்த அ. பாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டு சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (அ-05)

# பருத்தித்துறையில் நேற்று திலீபனின் நினைவேந்தல்



வடமராட்சி, செப். 24

தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவிடத்தில் வடமராட்சி மக்களால் நினைவேந்தப்பட்டது.

இதன்போது பொது ஈகச் சுடரை மாவீரர் லெப்டினன்ட் தென்றலின் சகோதரரும் ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவருமான சி.வேந்தன் ஏற்றி வைக்க மலர் மாலையை பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ டக்ளஸ் போல் அணிவித்தார். தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெ.ஜெயகோபி, காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இ.முரளிதரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பின் பிரதிநிதி க.தவராசா அஞ்சலியை ஆரம்பித்து வைத்ததை தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் அஞ்சலி செலுத்தினர். (அ-05-02)

## திலீபனின் ஊர்தி பவனி புங்குடுதீவில்


யாழ்ப்பாணம், செப். 24

தியாக தீபம் திலீபனின் 33ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நேற்று புங்குடுதீவு பகுதியில் தியாக தீபம் திலீபனின் உருவப் படம் தாங்கிய ஊர்திப்பவனி நடைபெற்றது

தியாகி தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் ஊர்தி பவனி புங்குடுதீவு பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக முக்கியமான இடங்களில் தரித்து நின்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த ஊர்தி பவனிக்கு யாழ் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டாளர்கள், வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள், புங்குடுதீவு பிரதேச பாடசாலை மாணவர்கள் மக்கள் ஆகியோர் உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தினர். (அ)



# வரணி பாடசாலை மாணவர்களுக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்



வடமராட்சி, செப். 24

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வரணி, இடைக்குறிச்சி சிறீ சுப்பிரமணிய வித்தியாலயத்துக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

4 இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் அபராஜிதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கையளித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-02)

# கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பில் அரசாங்கம் உடன் கவனம் செலுத்தவேண்டும்!

யாழ்ப்பாணம், செப். 24

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நியமனம் பெற்று தற்போது அதிபர் தரத்தில் பணியாற்றி வரும் அதிபர்கள் தொடர்பில் கல்வி அமைச்சு, எம். பி.கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கஷ்ட மற்றும் அதி கஷ்ட பாடசாலைகளில் காணப்பட்ட அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நேர்முகத் தேர்வுகள் மூலமாக அதிபர்கள் நியமிக்கப்பட்டதோடு அவர்கள் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அதிபர் தரத்துக்குள் உள் வாங்கப்பட்டு நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிபர்களுக்கான அதிபர்களுக்கான நிர்வாக கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படாமலும் இடமாற்ற செயற்பாடுகளில் அவர்களுக்கான நீதியான பொறிமுறை இன்மையாலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டு கல்வி சேவை தாபனத்தின் மேலதிக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கையொப்பமிட்டு நிரந்தர நியமன கடிதங்கள் வழங்கப்பட்ட போது "மிகை ஊழியர்" என்ற அடிப்படையில் இந்த அதிபர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 75 அதிபர்களும் நாடு பூராகவும் நூற்றுக்கணக்கான அதிபர்களுமாக தொடர்ந்தும் கொடுப்பனவுகள் மற்றும் இடமாற்றங்களில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலைமை காணப்பட்டு வருகிறது. குறித்த அதிபர்கள் 2018 ஆம் ஆண்டு அதிபர் தரம் இரண்டுக்கும் 2024 ஆம் ஆண்டு அதிபர் தரம் ஒன்றுக்கும் தரம் உயர்த்தப்பட்டபோதிலும் தகுதியான பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுவதற்கு மாகாண கல்வி அமைச்சு தொடர்ந்து புறக்கணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இது தொடர்பில் கல்வி அமைச்சு, எம். பிக்கள் கவனம் செலுத்தி தமக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.09.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மண் குதிரை கரைந்துதான் போகும்

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ கதைகள் - காட்சிகள். அனைத்துக்கும் பின்னர் என்ன நிலைமை? பெரியளவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இருந்த இடத்திலிருந்து அதிக தூரம் போயிருக்கவேண்டும் ஆனால், போகமுடிந்ததா?

2012இல் அப்போதிருந்த ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் இலங்கையின்மீதான பொறுப்புக்கூறல் பிரேரணை ஒன்றை கொண்டுவருதற்கு அனுசரணை வழங்கியது. அது இன்று வரையில் தொடர்கிறது. ஆனால், எவ்வித முன்னேற்றங்களும் இல்லாமலே தொடர்கிறது. பதினாறு வருடங்களுக்கு பின்னர் தென்னிலங்கை ஆங்கில ஊடகம் ஒன்று மென்மையான பிரேரணை என்று தலைப்பிடுமளவுக்கே நிலைமை இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அனுபவமில்லாத அரசாங்கம், விடயங்களைப் போட்டுடைத்து விடுவார்கள் என்றெல்லாம் பேசப்பட்டுக் கொண்டிருந்தநிலையில் எந்தவொரு நாட்டுடனும் மோதல் போக்கைக் காண்பிக்காமல், நாங்கள் உள்ளூர் பொறிமுறையின் அடிப்படையில் விடயங்களை முன்னெடுப்போம் என்று கூறி விடயத்தை நகர்த்தியிருக்கிறது. தற்போதுள்ள உலக அரசியல் சூழலில் குறிப்பாக, காஸாவில் இடம்பெற்றுவரும் யுத்தம், அந்த யுத்தத்தை நிறுத்த முடியாதநிலைமை - இவ்வாறான விடயங்களால் ஐக்கிய நாடுகள் சபை அதன் இயலுமை தொடர்பிலான கேள்வியுடன் இருக்கின்ற நிலையில் ஏனைய நாடுகள் மீது நிபந்தனைகளை விதிக்கும் தார்மீக நிலையில் இல்லை.

இவ்வாறானதொரு நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவருடனும் மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமல் - அதாவது, மகிந்த ராஜபக்ஷ போன்று சீன சார்புடன் சண்டித்தனம் காண்பிக்காமல் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துப்போகும் அணுகுமுறையைக் காண்பித்து, அதே வேளை மூன்றாம் தரப்பின் தலையீட்டை மறுத்தும் விடயங்களைக் கச்சிதமாகக் கையாண்டிருக்கிறது.

அடிப்படையில், இதுவரையில் வெளியக விசாரணை என்றவாறான மென்மையான அழுத்தங்களும் தற்போது கீழ்நிலைக்கு வந்திருக்கிறது. உள்ளக பொறிமுறையையே பிரதானமான விடயமாக மாறியிருக்கிறது. இலங்கைமீது, தனித்து - பிரத்தியேகமாக இலக்கு வைக்க முடியாத நிலைமைக்கு சர்வதேச அரசியல் காரணமே முக்கியமானதாகும். இந்தநிலைமையின் விளைவாக, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் புதிய பிரேரணை மென்மையானதாகவும் அதேவேளை, வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்பும் தென்படுகிறது.

சர்வதேசத்தை நோக்கிய தமிழர் நீதிக் கோரிக்கையின் பின்புலத்தில் நோக்கினால், அடிப்படையில் இது மோசமான பின்னடைவாகும். ஆனால், இவ்வாறான பின்னடைவில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில், உலக அரசியல் நிலைமைகளை துல்லியமாக கணிக்காமல் மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினால், குதிரை கரைந்துதான் போகும். இதன் காரணமாகத்தான், சர்வதேசத்தை நோக்கிய கோரிக்கைகளோடு மட்டும் நின்றுவிடாமல், இலங்கைக்குள் கையாளக் கூடிய விடயங்களை உச்சபட்சமாகக் கையாளவேண்டும் என்று ஈழநாடு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருந்தது.

# இந்திய - இலங்கை கடற்படை தளபதிகள் நேற்று சந்திப்பு

கொழும்பு, செப். 24

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஸ் கே திரிபாதி, நேற்று முன்தினம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொடவை சந்தித்தார். இந்த சந்திப்பு கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய கடற்படைத் தளபதி மற்றும் அவரது மனைவியை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடற்படைப் பணிப்பாளர் நாயகம் பயிற்சி ரியர் அட்மிரல் தம்மிக விஜேவர்தன வரவேற்றார்.

இதன்போது, அவருக்கு கடற்படையின் சம்பிரதாய மரியாதை வழங்கப்பட்டது. இதனையடுத்து அவர் கடற்படைத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கடற்படைத் தலைமையகத்தில் கடற்படைத் தளபதிக்கும் இந்திய கடற்படை தளபதிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பின் போது, கடல்சார் பாதுகாப்பு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு தொடர்பான மூலோ பாய மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுகளும் பரிமாறப்பட்டன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, இந்திய கடற்படைத் தளபதி இலங்கை அரசாங்கம் மற்றும் பாதுகாப்புத் தலைவர்களுடன் உத்தியோகபூர்வ சந்திப்புகளை நடத்த உள்ளார். அதேநேரம், இலங்கை கடற்படையால் 12 ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட காலி உரையாடல் சர்வதேச கடல்சார் மாநாட்டிலும் இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஸ் கே திரிபாதி பங்கேற்கவுள்ளார். (அ)

# தனியார் கடல் பாதுகாப்பு நிறுவனங்களின் பணிகள் கடற்படையினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, செப். 24

கடல்சார் பாதுகாப்பை வழங்கும் தனியார் நிறுவனங்களின் செயல்பாடுகள் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் இதனை அறிவித்தார்.

குறித்த தனியார் நிறுவனங்களால் கடலில் பயணிக்கும் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில், கடற்படை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21இன் படி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மக்கள் நலன் கருதி எதிர்க்கட்சிகள் செயல்படவில்லை!

## அமைச்சர் தம்மிக பட்டபெந்தி

கொழும்பு, செப். 24

நாட்டின் நலனுக்காவும் மக்களின் நலனுக்காகவும் எதிர்க்கட்சிகள் எப்போது ஒன்றிணைந்தது கிடையாது என சுற்றாடல் துறை அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சிகள் எப்போதும் பொது நிதிகளை கொள்ளையடிக்க மாத்திரமே ஒன்றிணைந்துள்ளன.

மக்கள் நலனுக்காக ஒருபோதும் ஒன்றிணையாத எதிர்க்கட்சிகள், தற்போது பொது நிதிகளை கொள்ளையடித்து, நாட்டை மோசமாக சிதைத்துக் கொண்டு, குற்றவாளிகள் ஆவதற்கான நிலையில் தான் ஒன்றிணைகின்றன.

பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, சுற்றுச்சூழல் ரீதியாகவும், நெறிமுறைகள் ரீதியாகவும் முற்றிலுமாக வீழ்ந்த ஒரு நாட்டை மீட்டெடுக்க ஆரம்பித்துள்ளோம். இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியுள்ளோம். முற்றிலுமாக வீழ்ந்த பொருளாதாரத்தை நிலைப்படுத்தியுள்ளோம்.


சமூக ரீதியாக சிதைந்திருந்த நாட்டை மீண்டும் ஒருமுகப்படுத்தியுள்ளோம். சட்டம் பலவீனமடைந்திருந்தது. இன்று, அனைவருக்கும் சமமாகச் சட்டம் அமுலாக்கப்படுகிறது. போதைப்பொருள் கடத்தல், குற்றவாளிகள் மற்றும் அரசியல் பாதுகாப்பில் இயங்கும் தரப்பினர் நாட்டை ஆட்சி செய்தனர்.

இன்று, அந்த குற்றச்செயல்களின் பின்னணியில் உள்ள அரசியல் சக்திகள் உட்பட அனைத்தும் வெளிப்படுகின்றன- என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள்சிறப்பாக அமையும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில்ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**சிம்மம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர்களைப் அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். புது பொருள் வந்து சேரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. புதிய சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

# ஊடகவியலாளர்களின் சுதந்திர உரிமை ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும்

## இளங்குமரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

ஊடகவியலாளர்கள் தங்கள் கடமைகளை சுதந்திரமாகவும் இடையூறு அற்ற வகையிலும் மேற்கொள்ளும் உரிமை ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின் போது செய்தி சேகரிக்கச் சென்ற பெண் ஊடகவியலாளர் ஒருவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் இளங்குமரன் எம். பி. விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டதாவது:

"ஊடகவியலாளர்கள் தங்கள் கடமைகளை சுதந்திரமாகவும் இடையூறு அற்ற வகையிலும் மேற்கொள்ளும் உரிமை ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும்.

இத்தகைய மிரட்டல்கள் ஊடகச் சுதந்திரத்தை மட்டுமன்றி, ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பாதிக்கும் ஆபத்தான நிகழ்வாகும்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்தி, குற்றத்தை நிகழ்த்தியவர்களுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் பாதுகாப்பான சூழலில் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தற்போதைய அரசாங்கம் தேவையான பாதுகாப்பை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது"- என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-05)

# 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, செப். 24

12 இலட்சம் ரூபாய் பெறுமதியான 6 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசித் சுரங்க வீரத் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் வவுனியா நகரப் பகுதியில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் கஞ்சா கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், மோட்டார் சைக்கிளும் உடைமையில் இருந்த 6 கிலோ கிராம் கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறு, மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 12 இலட்சம் ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வவுனியா மருக்காரம்பளை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# நாவற்குழியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 24

நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -24 நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் "அங்கம் வெட்டின படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

அத்தோடு, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

வவுனியா மாவட்டத்தில்

# 25 ஆயிரம் ஹெக்ரேயரில் பெரும்போக நெற்செய்கை

வவுனியா, செப். 24

வவுனியா மாவட்டத்தில் வரும் பெரும் போகத்தில் 25, 425. 37 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

நெல் விதைப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே இந்த மாதம் தொடங்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை மையங்களும் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இந்த மாதம் நெல் விதைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத் சந்திர தெரிவித்தார்.

25,000 ஏக்கர் அடி நீர் கொள்ளளவு கொண்ட பாவற்குளத்தை அண்டிய பகுதிகளில் நெல் விதைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகளுடனான கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குளங்களின் கீழ் 4,500 ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டு வருகிறது. மேலும் விதைப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கமநல சேவை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (எ)

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப். 24

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் "திருவிளையாடல்" புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்துச் சமயப் பெரியார்கள்" குருபூஜை விழாவின் ஓர் அங்கமாக நவராத்திரி விழா தொடர் 01 அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. விஷேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப் புலவர் செ. த. குமரன் "வல்லமை தாராயோ" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

******************

யாழ்ப்பாணம், செப். 24

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் "திருவிளையாடல்" புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் "ஈழத்துச் சமயப் பெரியார்கள்" குருபூஜை விழாவின் ஓர் அங்கமாக நவராத்திரி விழாத் தொடர் 02 தெல்லிப்பழை, மாவைக் கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. விஷேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் "கும்ப பூஜை மகிமை" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் நிச்சயமாக நீக்கப்படும்!

## கூறுகின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, செப். 24

**“வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய யோசனை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு உட்பட முக்கிய பல விடயங்களை மையப்படுத்தியமாகவே புதிய அரசமைப்புக்குரிய பணி இடம்பெறும். இதனை நாம் நிச்சயம் செய்வோம். இதற்கு எமக்கு கால அவகாசம் அவசியம்.”**

-இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு உறுதிமொழிக்கும் நாம் நிச்சயம் பொறுப்பு கூறுவோம்.

முதலில் தள்ளாடும் நிலையில் உள்ள பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவேண்டும். மக்களுக்கு நிவாரணத்தை வழங்கவேண்டும். ஊழல், மோசடிகளை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். இவற்றை செய்யாமல் எடுத்த எடுப்பிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் கைவைத்தால் மக்கள் அதனை விரும்பமாட்டார்கள்.” எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எமக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன. தற்போதுள்ள அரசமைப்புக்கு பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய பணியின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும், புதிய தேர்தல் முறைமை உருவாக வேண்டும், அனைத்து மக்களுக்கும் உரிமைகள் கிடைக்கக்கூடிய வகையில் குறிப்பாக



வடக்கு-கிழக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய யோசனைகள் இருக்கவேண்டும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

இவற்றை உள்ளடக்கிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதற்கு கால மெடுக்கும். நிபுணர்கள் மற்றும் மக்களின் கருத்துகளை உள்வாங்கி அரசமைப்பு தயாரிக்கப்படும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படும்.” எனவும் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் குறிப்பிட்டார். (அ)

## தங்காலையில் மீட்ட போதைப்பொருள் 9,88 கோடி ரூபா பெறுமதி கொண்டது!

கொழும்பு, செப். 24

தங்காலை பகுதியில் பொலிஸாரால் மீட்கப்பட்ட போதைப்பொருள் தொகையின் மொத்த பெறுமதி சுமார் 9,88 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மொத்த போதைப்பொருட்களின் அளவு 705.91 கிலோ கிராம் என்றும், அதில் 284.94 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 420.976 கிலோ கிராம் ஐஸ் ஆகியவை அடங்கும் என்றும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும், போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட லொறிகளின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தங்காலை பகுதியில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருள், வெளிநாட்டில் உள்ள ஒரு போதைப்பொருள் வியாபாரியுடையது என்பது தெரிய வந்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள ‘உனகுருவே சாந்த’ என்ற குற்றவாளியால், சம்பந்தப்பட்ட போதைப்பொருள் கப்பல் நாட்டுக்கு அனுப்பப்பட்டது என்பது பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தங்காலை, சீனிமோதர பகுதியில் உள்ள ஒரு வீட்டில் மூன்று பேர் மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மூன்று லொறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ், ஹெராயின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன.

நாட்டில் ஒரே நாளில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் தொகையாகவும் இது கருதப்படுகிறது.

இந்த நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுக்கு மேலதிகமாக, ஒரு ரி-56 துப்பாக்கி மற்றும் 5 பிஸ்டல் வகை துப்பாக்கிகளையும் பொலிஸார் மீட்டனர். (அ)

## ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறை!

கொழும்பு, செப். 24

முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

இலங்கையின் ஈ-விஸா செயல்முறையை இடைநிறுத்துவது தொடர்பான இடைக்கால உத்தரவை மீறியதற்கான நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக அவருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோரின் ஒப்புதலுடன், நீதிபதி யசந்த கோட்டாகொட இந்த தீர்ப்பை அறிவித்தார்.

தீர்ப்பை வழங்கும்போது, ஹர்ஷ இலுக்பிட்டிய தனது செயல்கள் மூலம் நீதித்துறைக்கு எதிராக கடுமையான அவமதிப்புச் செயலைச் செய்துள்ளதாக நீதிபதி கோட்டாகொட கூறினார்.

நாட்டின் ஒன்லைன் விஸா முறையை நிர்வகிக்க வி.எவ்.எஸ். குளோபல் நிறுவனத்துடனான அரசாங்கத்தின் ஒப்பந்தத்தைச் சுற்றியுள்ள சர்ச்சையிலிருந்து இந்த வழக்கு உருவாகிறது.

அதிகரித்து வரும் விமர்சனங்கள் மற்றும் சட்ட சவால்களுக்கு மத்தியில், புதிய ஈ-விஸா செயல்முறையை செயல்படுத்துவதை நிறுத்தி உயர் நீதிமன்றம் முன்னதாக ஒரு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. (அ)

## மீன்பிடிக்கச் சென்ற 2 மீனவர்கள் மாயம்!

கொழும்பு, செப். 24

மீன்பிடி நடவடிக்கைக்கு கடலுக்கு சென்ற இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

கல்பிட்டி, சின்னகுடியிருப்பு வாவியில் இருந்து கடந்த 21 ஆம் திகதி மாலை படகில் மீன் பிடிக்கச் சென்ற இரண்டு நபர்கள் திரும்பி வராதது தொடர்பாக நேற்று முன் தினம் கல்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

காணாமற்போனவர்கள் 27 மற்றும் 34 வயதுடைய கல்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

காணாமற்போனவர்களைத் தேடுவதற்காக கல்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளும் கடற்படை அதிகாரிகளும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

## 4 அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள்!

கொழும்பு, செப். 24

முக்கிய நான்கு அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குப் புறப்பட்டுள்ள நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் இணைந்து கொண்டார்.

இந்த நிலையில், நான்கு அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான பதில் அமைச்சராக அனில் ஜயந்த பெர்ணான்டோவும், டிஜிற்றல் பொருளாதார பதில் அமைச்சராக எரங்க வீரரத்னவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக அருண ஜயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் ஜனாதிபதியுடன் அமெரிக்க விஜயத்தில் பங்கேற்றுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பதவி வகிக்கும் வெளிவிவகாரம், வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக அருண் ஹேமச்சந்திர நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, செப். 24

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 5 கோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தில் உள்ள “கிறீன் சனல்” வழியாக இவர்கள் வெளியேற முயன்றபோது, இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களில் கொழும்பைச் சேர்ந்த 29 வயதுப் பெண் ஒருவரும், இந்தியாவின் சென்னையில் வசிக்கும் 48 வயது ஆணும் அடங்குவர்.

விசாரணையில் இருவரும் தாய்லாந்தின் பாங்கொக்கில் “குஷ்” என்ற போதைப்பொருளை வாங்கியதாகவும், பின்னர் இந்தியாவின் புதுடில்லிக்குச் சென்று, நேற்றுக் காலை 6.50 மணிக்கு எயார் இந்தியா விமானம் மூலம் கட்டுநாயக்க வந்தடைந்ததாகவும் தெரிய வந்தது. (அ)

எக்ஸ்-பிரஸ் பேர்ள் பேரழிவு:

## அபராதத்தை செலுத்துவதற்கு மறுக்கிறது கப்பல் நிறுவனம்!

கொழும்பு, செப். 24

சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட கப்பல் நிறுவனம் ஒன்று, நாட்டின் மிக மோசமான சுற்றுச்சூழல் மாசுபாட்டுக்குக் காரணமானதற்காக இலங்கை உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட 1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீட்டை செலுத்த மறுப்பதாக நேற்று அறிவித்துள்ளது.

எக்ஸ்-பிரஸ் பீடர்ஸ் தலைமை நிர்வாகி ஷ்முவேல் யோஸ்கோவிட்ஸ் ஒரு பிரத்யேக நேர்காணலில், பணம் செலுத்துவது உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் பரந்த அளவிலான தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் ஆபத்தான முன்னுதாரணத்தை அமைக்கும் என்றும் நம்புவதாகக் கூறினார்.

அத்துடன், கழிவுகளை அகற்றவும், கடல் அடிப்பகுதி மற்றும் கடற்கரைகளை சுத்தம் செய்யவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் 170 மில்லியன் அமெரிக்க டொலரை செலவிட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிறுவனம் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட கொள்கலன் கப்பலான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை இயக்கியது.

ஜூன் 2021 இல் கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்குப் பிறகு-நைத்திரிக் அமிலக் கசிவு இரண்டு வாரங்கள் நீடித்தது.

கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் வருவதற்கு முன்பு கசிந்த நைத்திரிக் அமிலத்தை இறக்குவதற்கு கட்டார் மற்றும் இந்தியாவில் உள்ள துறைமுகங்கள் அனுமதி மறுத்தன.

கப்பலில் இருந்து தொன் கணக்கில் மைக்ரோபிளாஸ்ரிக் துகள்கள் இலங்கையின் மேற்கு கடற்கரையில் 80 கி.மீ நீளமுள்ள கடற்கரையை மூழ்கடித்தன.

பல மாதங்களாக மீன்பிடித்தல் நடவடிக்கை பாதிக்கப்பட்டது.

இலங்கை உயர் நீதிமன்றம் ஜூலை மாதம், அந்நிறுவனம் இலங்கை அதிகாரிகளுக்கு ஒரு வருடத்திற்குள் 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும், முதல் தவணையாக 250 மில்லியன் அமெரிக்க டொலரை செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானம், புகையிலை பாவனையால் வருடாந்தம் 70 ஆயிரம் பேர் உயிரிழப்பு

## சுகாதாரம், சமூக, பொருளாதார துறைகளுக்கு பெரும் பாதிப்பு



ஒலுவில், செப். 24

இலங்கையில் மதுபானம் மற்றும் புகையிலை பாவனையால் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் இவற்றால் வருடாந்தம் சுமார் 70 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீடத்தின் பதில் பீடாதியும் அரசறிவியல் துறைத்தலைவருமான கலாநிதி எம். அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீடத்தின் சமூகவியல் துறை ஒருங்கிணைத்த "ஏடிஐசி - இரண்டாம் கட்டத் திட்டம்" தொடர்பான ஆரம்ப செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு பிரதான உரை நிகழ்த்திய கலாநிதி அப்துல் ஜப்பார் மேலும் தெரிவிக்கையில் "உலகளவில் ஆண்டுதோறும் சுமார் 2. 6 மில்லியன் மரணங்கள் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையிலும் மதுபானம் மற்றும் புகையிலை பாவனை சுகாதாரம், சமூக, பொருளாதாரத் துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எமது நாட்டில் சுமார் 50, 000 பேர் மது பாவனையினாலும் 20, 000 பேர் புகையிலை பாவனையாலும் அநியாயமாக உயிரிழக்கின்றனர்.

இந்தப் பிரச்னையை சமாளிக்க வலுவான அரசு கொள்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் அவசியமாகின்றன. இவ்வாறான திட்டங்கள் மாணவர்களுக்கு அறிவும் விழிப்புணர்வும் அளிக்கும் ஓர் அரிய வாய்ப்பாக இருக்கும்"- என்றார்.

ஏடிஐசி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் டி. சேரம் உரையாற்றுகையில் இலங்கையில் மதுபானம், புகையிலை மற்றும் பிற போதைப் பொருட்களின் பரவல் நிலைமை, சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் மற்றும் அவற்றைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் தேசிய அளவிலான நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 83 வீதம் அசாதாரண நோய்கள் காரணமாக ஏற்படுகின்றன. அதற்கான முக்கிய அபாயக் காரணிகள் புகையிலை, மதுப் பயன்படுத்தல், ஆரோக்கியமற்ற உணவு மற்றும் உடற்பயிற்சி குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தினசரி 42 பேர் புகையிலை பாவனை காரணமாக உயிரிழக்கின்றனர் என்றும் அரசுக்கு வருவாயாக 92.9 பில்லியன் கிடைத்தாலும் சுகாதாரச் செலவு 240 பில்லியனைத் தாண்டுவதாகவும் அவர் தெரிவித்தார். அதேபோல், மதுவால் வருடத்துக்கு 237 பில்லியன் ரூபாய் செலவாகி, வருவாய் 165 பில்லியன் ரூபாய் மட்டுமே கிடைக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# திருகோணமலையில் நூல் வெளியீட்டு விழா

திருகோணமலை, செப். 24

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கவிஞர் எஸ். ஆர். தனபாலசிங்கத்தின் "காலநதியின் சில துளிகள்" கட்டுரை நூலும் "வீரனாக்குவது எது?" மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு நூலும் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 09. 45மணிக்கு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை தமிழ்ச்சங்கத் தலைவர் திருமலை நவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழகப் பேராசிரியர் வ. கனகசிங்கமும் சிறப்பு அழைப்பாளர்களாக ஓய்வுநிலை நீதிமன்றப்பதிவாளர்களான எம்.எஸ். எம். நஸீர், கெ. தர்மகுலராஜாவும் சிறப்புறும் ஆளுமையாக ஒய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் ஒ. குலேந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

# காட்டு யானைகளால் கடுமையான சேதம்!

சம்மாந்துறை, செப். 24

நான்கு காட்டு யானைகள் நுழைந்து கடுமையான சேதங்களை ஏற்படுத்தி வருவதாக அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை செந்நெல் கிராம மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இருந்த அச்சுறுத்தல் நேற்று முன்தினம் இரவு வரை ஏற்பட்டுள்ளதாகவும் பயிர் நிலங்கள், வாழைத்தோட்டங்கள் மட்டுமன்றி சில வீடுகளின் சுவர்களையும் உடைத்து சேதப்படுத்தியதாக மக்கள் கூறினர்.

மேலும், இந்தப் பகுதியில் மின்விளக்குகள் இன்மையால் மக்கள் யானைகளை காட்டுக்குள் விரட்டுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டதுடன் அதிகாலை 05.00 மணி வரை மக்களை அச்சுறுத்தும் வகையில் யானைகளின் நடமாட்டம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தாலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-01)

இளைஞர்களை இலக்கு வைத்து

# போதைப்பொருள் விற்பனை சம்மாந்துறையில் 4 பேர் கைது

சம்மாந்துறை, செப். 24

இளைஞர்களை இலக்கு வைத்து நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட குழுவினரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் புதிய கிராமம் பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் நூதனமான முறையில் முன்னெடுக்கப்படுவதாக சம்மாந்துறை ஊழல் ஒழிப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. இந்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 28 வயதுடைய இரு சந்தேக நபர்களும் 25 வயது மற்றும் 40 வயது சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 2321 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள், 380 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள், ஒரு தொகை பணம், 3 கையடக்கத் தொலைபேசி, 3 வங்கி அட்டைகள் என்பன மீட்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் கூறினர். (எ)

# கல்முனையில் டிப்பர் மோதி 4 வயது சிறுவன் உயிரிழப்பு!

கல்முனை, செப். 24

அம்பாறை, கல்முனை சந்தியிலிருந்து பண்டாரநாயக்க சுற்றுவட்டம் நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் வீதியோரத்தில் நடந்து சென்ற நான்கு வயது சிறுவன் மற்றும் பெண்ணொருவர் மீது மோதிய விபத்தில் சிறுவன் உயிரிழந்தான்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சிறுவனும் பெண்ணும் காயமடைந்து அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

அம்பாறை உஹன பகுதியைச் சேர்ந்த 4 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த விபத்துடன் தொடர்புடைய டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சலவைத்தூள் என்ற போர்வையில் குறைந்த நிறையில் மலிவு விற்பனை

## மோசடி கும்பல் தொடர்பில் மக்களே அவதானம்

கல்முனை, செப். 24

சலவைத்தூள் என்ற போர்வையில் குறைந்த நிறையுடன் மலிவு விலையில் விற்பனை செய்து பொதுமக்களை ஏமாற்றிய கும்பல் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி மூலமான முறைப்பாட்டுக்கமைய அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றி வளைத்து சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது மோசடி செய்யப்பட்டு கவர்ச்சிகரமான பொதி செய்யப்பட்ட நிலையில் சலவைத்தூள் என்ற பெயரில் ஒரு கிலோ 300 ரூபாய்க்கு பொது மக்களுக்கு மலிவாக விற்பனை செய்யப்பட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த சலவைத்தூள் பொதி ஒரு கிலோ எனக் கூறப்பட்ட போதிலும் அதனை 300 ரூபாய் கொடுத்து வாங்கிச் சென்றவர்கள் நிறையின் அளவு குறைவாக இருப்பதை கண்டறிந்துள்ளனர்.

மேலும், அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தைப்பகுதியில் தற்காலிக கூடாரம் ஒன்று அமைத்து குறித்த கும்பல் போலியான விளம்பரப்படுத்தலுடன் இந்த மோசடியை அரங்கேற்றியுள்ள நிலையில் சுமார் 197இற்கும் அதிகமான எடை குறைக்கப்பட்ட சலவைத்தூள் 880 கிராம், 750 கிராம், 800 கிராம், 670 கிராம், பெட்டிகள் இவ்வாறு மீட்கப்பட்டிருந்தன.

இதுதவிர இச்சலவைத்தூள் நற்பிட்டிமுனை, காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்ட நிலையில் பொதுமக்கள் அவற்றை மீண்டும் குறித்த கும்பலிடம் கொடுத்து விட்டு தங்கள் பணத்தை மீண்டும் பெற்றுச்சென்றுள்ளனர். (எ-01)



வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை தமிழ் குறிச்சி அருள்மிகு சிறீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கின் தீ மிதிப்பு சடங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (படங்கள்:- வி.ரி.சகாதேவராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா...

உரிமைகள் நிலைமை, குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்னையை சர்வதேச அரங்கில் விவாதிப்பதற்கு ஒரு முக்கிய தளமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## நாட்டு மக்கள்...

இதனை குறிப்பிட்டுள்ள அவர், கார்ல்டன் இல்லத்தில் தமது சகோதரர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ தம்மை சந்திக்க வந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

"லெப். கேணலாகவும் பாதுகாப்புச் செயலாளராகவும், பின்னர் உயிர்களை காப்பாற்றிய ஜனாதிபதியாகவும் இருந்த கோட்டாபயவால் நான் கௌரவிக்கப்படுகிறேன். அவர் எப்போதும் மக்களை பாதுகாத்தார் என்பதில் எனக்கு பெருமை" என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறித்து நினைவு கூர்ந்த அவர், " மூன்று தசாப்தங்களுக்கு மேல், நாட்டை அழித்த பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமை என் வாழ்நாளின் மிக மகிழ்ச்சியான செய்தியாகும். அந்த தருணத்தில் விமல் எனக்கு அருகில் இருந்தார். அந்த மகிழ்ச்சியை நாங்கள் புன்னகையுடன் பகிர்ந்து கொண்டோம்" என்று குறிப்பிட்டார்.

இதேநேரம், கடந்த சில நாட்களாக கார்ல்டன் இல்லத்துக்கு வரும் மக்களுடன் அரட்டை அடித்து மகிழ்ந்ததாகவும், மக்களின் புன்னகைதான் உண்மையான சொத்து எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ)

## தமிழ் மக்களின்...

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 3:30 மணியளவில் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இக்கையொப்பங்களுடன் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட கடித வரைவும் கையளிக்கப்பட்டது.

தமிழ் தேசிய கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும், சமத்துவ கட்சியின் செயலாளர் நாயகம். சந்திரகுமாரும், கட்சிகளின் ஒருங்கிணைப்பாளரான குருசுவாமி சுரேந்திரனும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்பட்டு ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும் பாதுகாப்பு சபைக்கும் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதி செய்யப்பட்டுள்ள இக் கடிதத்தில் நீதியரசர் சீ.வீ. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில் செ. கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார் மற்றும் எஸ். நவீந்திரா (வேந்தன்) ஆகியோர் கையொப்பம் இட்டு இருந்தனர்.

காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழிய குற்றங்களுக்கான நீதியை விரைந்து நிலை நாட்டவும், பிரதானமாக செம்மணி உட்பட எமது வடக்கு கிழக்கு தாயகத்தில் அடையாளப்படுத்தப் படும் மனிதப் புதைகுழிகளில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும், கண்டெடுக்கப்படும் ஆதாரங்களை உறுதிப்படுத்துவும் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஆலோசனை, தொழில்நுட்பம், நிதி, பாதுகாப்பு என பல கோரிக்கைகள் இக்கடிதத்தில் உள்ளடங்கியிருந்தன. அவற்றை நேரடியாகவும் ஐநா ஒருங்கிணைப்பாளரிடம் இச்சந்திப்பின்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டன.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக நடந்த இச்சந்திப்பு கையெழுத்து ஆவணங்களையும் கடிதப் பிரதியையும் கையளித்ததுடன் முடிவு பெற்றது. (அ)

## பிறந்து...

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இதன்போது அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுத்தபோது பெண் குழந்தை இறந்த நிலையில் காணப்பட்டது. ஆண் குழந்தை உயிருடன் பிறந்த நிலையில் 45 நிமிடங்கள் கழித்து உயிரிழந்தது.

குழந்தைகளின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-05)

## தமிழர்களுக்கு...

போராட்டத்தை வலுப்படுத்தவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது கூட்டத்தொடரில் 22 ஆம் திகதி தொடக்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்த மாநாட்டில் எமது உறவுகளுக்காக நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். இதுவரை காலமும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

மனிதாபிமானத்தை பேணுகின்ற மனித உரிமை பேரவையில் எமக்கான நீதியினை வழங்குவதற்கு அனைத்து நாடுகளும் புவியியல் அரசியலைத் தவிர்த்து முன்வர வேண்டும். ஏனைய நாடுகள் மற்றும் அனுசரணை வழங்கும் நாடுகளிடமும் நாம் கோரிக்கையை விடுக்கிறோம்.

தமிழ் மக்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என்பதை நாம் இங்கே ஈழத்தில் வாழும் தமிழர்களாக தெரிவித்து கொள்கிறோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றனர். (அ)

## மின் விநியோக...

இரத்து செய்யும் முடிவு குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் "மின்தடையை அனுமதிக்க அரசாங்கம் தயாராக இல்லை. இது ஒரு அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது. எனவே, தயவுசெய்து தொடருங்கள், வேலை செய்ய முடியாவிட்டால் இழப்பீடு பெற்றுச் செல்லலாம். ஆனால் இந்த பணியைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். இந்த சீர்திருத்தங்களைச் செய்யாமல் முன்னேற முடியாது - என்றார்.

மேலும், இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்காவிட்டால் இலங்கை நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக் காட்டினார். (அ)

## தீர்வு குறித்து...

செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக உங்களுக்கு எழுத முடிவு செய்யப்பட்டது.

நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் ஆகின்றது. உங்கள் தேர்தல் அறிக்கையிலும் மற்றும் பல அறிவிப்புகளிலும் இந்த மிக முக்கியமான பிரச்னையைத் தீர்ப்பீர்கள் என நீங்கள் உறுதியளித்துள்ளீர்கள். இருப்பினும், கடந்த ஒரு வருடமாக இந்த விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முதன்மையான தமிழ் அரசியல் கட்சியாக, மேற்கூறிய பிரச்னை தொடர்பாக உங்கள் அரசுடன் கலந்துரையாட நாங்கள் தயாராக உள்ளோம். அந்தவகையில் உங்களைச் சந்திக்க கீழே கையொப்பமிடப்பட்ட தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் எங்கள் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழு உங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் நேரத்தில் உங்களை சந்திக்க ஒரு நேரத்தை ஒதுக்கித் தருமாறு வேண்டுகின்றோம்." - என்றுள்ளது. (அ)

# கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை மீள இயங்க செய்வதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, செப். 24

பல வருடங்களாக இயங்காமல் இருக்கும் கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை மீள இயங்க செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையின்போது ஆளும் கட்சி உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கேள்வியெழுப்புகையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் நெதர்லாந்து அரசாங்கத்தால் கட்டப்பட்ட சிறப்பு மகளிர் சிகிச்சை நிலையமானது பல ஆண்டுகளாக இயங்காமல் இருக்கிறது. இதனை நாங்கள் சென்று பார்த்தோம். அங்கே இலங்கையில் எங்கும் இல்லாத ஸ்கான் மற்றும் கதிரியக்க இயந்திரங்கள் உள்ளபோதும். அவற்றில் சில உபகரணங்கள் காலாவதியாகியுள்ளன.

சுகாதார அமைச்சுசார் ஆலோசனை கூட்டத்தில் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது. அதன்போது வடக்கு மாகாணத்தில் சுழற்சி முறையில் ஆளணிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறப்பட்டது.

சுகாதார அமைச்சர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் அவதானம் செலுத்தி நீண்ட காலமாக இயங்காமல் இருக்கும் வைத்தியசாலைகளை உடனடியாக இயக்கவும், ஆளணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன்மூலம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கர்ப்பவதிகள் உள்ளிட்ட பெண்கள் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும்-என்றார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இந்த பிரச்னை உண்மையானதே. அங்கே கட்டடங்கள், உபகரணங்கள் இருந்தாலும் ஆளணி போதுமானதாக இல்லை. இலங்கைக்கு வரும் விசேட வைத்தியர்களை அங்கு அனுப்பினாலும் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருப்பது தொடர்பிலும் பிரச்னைகள் உள்ளன.

எவ்வாறாயினும் நிறைவுகாண் ஊழியர்களை நாங்கள் பயிற்றுவித்து வருகின்றோம். இதனூடாக அங்கு ஆளணியை பூர்த்தி செய்ய முடியுமென்று நினைக்கின்றேன். கிளிநொச்சி பெரிய வைத்தியசாலை தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். அங்குள்ள குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுப்போம்-என்றார். (அ)

# "அநுரவின் காலத்திலேயே எரிபொருள் 39 ரூபா வரையில் விலை குறைந்தது"

கொழும்பு, செப். 24

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டில் எரிபொருள் விலை 17 முதல் 39 ரூபாய் வரை குறைந்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஊடகங்கள் முன்னிலையில் நேற்று உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் நிறைவடையும் வேளையில், எரிபொருள் விலைகள் மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைக் குறைப்பு மக்களுக்கு ஓரளவு நிம்மதியை அளித்துள்ளது.

தரவுகளின்படி, 2024 ஒகஸ்ட் 31 மற்றும் 2025 ஒகஸ்ட் 31இற்கு இடையில், லங்கா பெற்றோல் (92 ஒக்ரேன்) ஒரு லீற்றரின் விலை 33 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் லங்கா பெற்றோல் (95 ஒக்ரேன்) லீற்றர் ஒன்றி விலை 36 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

லங்கா ஓட்டோ டீசலின் விலை லீற்றருக்கு 24 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், சூப்பர் டீசலின் விலை 39 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 17 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## அரசின்...

உள்ளீடு தேவைப்படும் அரச சேவைகளை வழங்குவதற்கான தற்போதைய வேறுபட்ட அணுகுமுறைகள் பொதுமக்களுக்கு குறிப்பிடத்தக்க சிரமத்தை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது ஆண்டுதோறும் ரூ. 500 மில்லியனுக்கும் அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத் திட்டத்துக்கு இணங்க, ஒரே கணினி பயன்பாட்டின் மூலம் குடிமக்களுக்கு பரந்த அளவிலான அரச சேவைகளை உள்ளடக்கிய 'கவன்மெண்ட் சுப்பர்' செயலியை உருவாக்குவது ஒரு மூலோபாய முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், இலங்கையின் 18 வயதுக்கு மேற்பட்ட 14 மில்லியன் குடிமக்களும், ஆண்டுக்கு 2 மில்லியன் பார்வையாளர்களும் ஒரே இடைமுகத்தின் மூலம் அரச சேவைகளை தடையின்றி அணுக உதவும் ஒரு டிஜிற்றல் தளத்தை உருவாக்கும்.

இது அனைத்து அரச சேவைகளையும் ஒரே பயனர் நட்பு கைபேசி செயலி மற்றும் வலை பயன்பாட்டில் ஒருங்கிணைக்கும். இதன்படி, 2025 - 2026 கால கட்டத்தில் மொத்தம் ரூ. 500 மில்லியன் செலவில் 'கவன்மெண்ட் சுப்பர்' செயலி விண்ணப்பத் திட்டத்தை இரண்டு கட்டங்களாக செயல்படுத்த டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (அ)

## மின்சாரம்...

காரணமாக மின்சாரம் தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

பின்னர் அவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டாடர். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-05)

## அமெரிக்கா...

நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பிலும் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இணைந்து கொண்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# வடக்கின் நிலையான அபிவிருத்திக்கு முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம்

## அமெரிக்க அதிகாரியிடம் ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், செப். 24

**வடக்கு மாகாணத்தின் நிலைத்த நீடித்த அபிவிருத்திக்காக முதலீட்டாளர்களை வரவேற்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களுக்குப் பொறுப்பான செயலர் அந்தோனி பெர்னார்ட்டிடம் சுட்டிக்காட்டினார்.**



வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக வந்துள்ளதாகவும், பல தரப்பினரையும் சந்தித்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் செயலர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள் அது தொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்கால காணி விடுவிப்புக்கள் உள்ளிட்ட விவரங்கள் தொடர்பில் ஆளுநரிடம், தூதரக அதிகாரி கேட்டறிந்து கொண்டார். மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

கடந்த காலங்களில் முன்னைய ஆட்சியாளர்களால் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வயல் நிலங்கள் என்பன வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் வர்த்தமானி மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக் கூறிய ஆளுநர், இது திட்டமிட்ட நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கம் அவற்றை விடுவிப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளையும் விவரித்தார்.

கடந்த கால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பாகுபாடான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்னைகளின் தாக்கம் தற்போதும் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், மிகச் சவாலான நிலையிலும் அதனைத் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார். (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிக்கப்பட்டது எதற்காக?

## சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி

கொழும்பு, செப். 24

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களை சபைக்கு சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரிடம் நேற்று கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சஜித்,

அருண ஜயசேகர பிரதி அமைச்சர் தொடர்பில் எமக்கு தனிப்பட்ட எந்தப் பிரச்னைகளும் இல்லை. அவர் தற்போது பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்து வருகிறார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டு வந்ததன் பிற்பாடு, அதனை நிராகரிப்பதற்கு அடிப்படையாக இருந்த செயலாளர்கள் குழாமின் அறிக்கைகள் மற்றும் சட்டமா அதிபரின் அறிக்கை உள்ளிட்ட ஏனைய விடயங்களை இந்த சபைக்கு சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்-என்றார். (அ)

# வடகொரியா நிலைமையை தோற்றுவிக்க அரசு முயற்சி!

## சுட்டிக்காட்டுகிறது மொட்டு கட்சி

கொழும்பு, செப். 24

இலங்கையில் வடகொரியாவின் நிலைமையை தோற்றுவிப்பதற்கு ஆளுங்கட்சி முயற்சித்துவருகின்றது. இதன்ஓர் அங்கமாகவே அடக்குமுறை தலைதூக்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயகத்தை மதிக்கும் கட்சி என்ற வகையிலேயே எமது கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் பங்கேற்றது. கட்சியின் சார்பில் செயலாளர் என்ற அடிப்படையில் நான் பங்கேற்றிருந்தேன்.

எமது கட்சிக்குரிய தனித்துவங்கள் மற்றும் கொள்கைகளை பாதுகாத்தபடியே நாம் பயணிக்கின்றோம்.

எனினும், நாட்டில் ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பல கட்சி முறைமையை இல்லாதொழித்து, எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்களை ஒடுக்கி, வடகொரியாவில்போன்று ஜனநாயகம் அற்ற சூழ்நிலையை இங்கு ஏற்படுத்துவதற்கு பாரிய முயற்சி இடம்பெறுகின்றது.

இதற்கு ஓர் அங்கமாகவே அடக்குமுறை தலைவிரித்தாடுகின்றது. தமது கட்சி அலுவலகத்தில் இருந்தவர்களை பொலிசுக்கு நியமித்து, தமது தேவைக்கேற்ப பொலிஸாரை பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர். எனவேதான் ஜனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கில் எதிரணிகள் ஒன்றுபட்டுள்ளன-என்றார். (அ)

# மின்சார சபை ஊழியர்களின் சகல விடுமுறைகளும் இரத்து!

கொழும்பு, செப். 24

இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த உத்தரவு மறு அறிவிப்பு வரும் வரை அமுலில் இருக்கும் என்று மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய பொது சேவைகளாக அறிவிக்கும் ஒரு அசாதாரண வர்த்தமானி அறிவிப்பை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்டார்.

மின்சார விநியோகத்தில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நிறுவனத்தாலும் வழங்கப்படும் சேவைகள் தடைப்படவோ அல்லது குறுக்கிடவோ வாய்ப்புள்ளது.

இதனால் அறிவிப்பு அவசியமாகும் என்று ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம், மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படுகின்றன. (அ)

# எந்தவொரு குற்றவாளியும் இனிமேல் தப்பிக்கமுடியாது

## தகவல் வழங்குவோருக்கு வெகுமதி என்கிறார் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, செப். 24

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தரைப்பகுதியில் அதிக தொகையான ஐஸ் போதைப்பொருள் தங்காலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு குற்றவாளியும் இனிமேல் தப்பிக்கமுடியாது என்றும் அவர் கூறினார்.

தங்காலையில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதலின் போது, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் கடத்தல்காரர்களும், விற்பனையாளர்களும், அதன் பின்னணியிலிருந்து செயற்படுவோருக்கு மகிழ்ச்சியடைய முடியாததொரு சூழலை ஏற்படுத்தியுள்ளோம்.

அவர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம்.

முன்னதாக மாத்தறையில் கைப்பற்றப்பட்ட 394 கிலோகிராம் போதைப்பொருளே இன்றுவரை தரைவழிச் சோதனையில் சிக்கிய அதிக தொகையான போதைப்பொருளாக இருந்தது.

அதன்பின்னர் முதல் முறையாக தரைவழிச் சோதனையில் இன்று 635 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில், எந்தவொரு போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கும் அடைக்கலம் வழங்க எந்த வகையிலும் நடவடிக்கை எடுக்கப்படாது-என்றார். (அ)

# சுற்றுலா வாகனங்களுக்கு புதிய பாதுகாப்பு விதிகள்!

கொழும்பு, செப். 24

எல்ல- வெள்ளவாய பள்ளத்தாக்கில் பஸ் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதை அடுத்து, விபத்துக்களை தடுக்க அரசாங்கம் முனைந்து வருகிறது.

இதன்கீழ் அதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டு, அதில் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சுற்றுலாப் பயணத்துக்கு முன்னர் வாகன உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், பயணிகள் மற்றும் சுற்றுலா ஏற்பாட்டாளர்களின் தேவைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில், ஒரு விரிவான பயணத்திட்டத்தை முன்கூட்டியே சமர்ப்பித்து, தொடர்புடைய அமைப்பிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சிறப்புச் சுற்றுலா வாகனங்களை முறைப்படுத்துவதற்கு எனத் தனி அமைப்பு எதுவும் இல்லை.

இதனை கருத்திற்கொண்டு, இந்தப் பணியை மேற்கொள்வதற்காக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழு போன்ற ஒரு புதிய அமைப்பு நிறுவப்படவேண்டும் என்று பரிந்துரையை குறித்த குழு முன்வைத்துள்ளது.

அனைத்துச் சுற்றுலா வாகனங்களும் இந்த அமைப்பில் பதிவு செய்யப்படவேண்டும்.

அவை அந்த அமைப்பின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படவேண்டும்.

பயணத்தின் போது, ஒவ்வொரு ஏழரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகும், சாரதிக்கு உணவு மற்றும் ஓய்வுக்காக குறைந்தபட்சம் அரை மணி நேரம் ஓய்வு அளிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு 24 மணி நேரப் பயணத்துக்கும் பிறகு, சாரதிக்கு குறைந்தபட்சம் 10 மணி நேரத் தொடர் ஓய்வு அளிக்கப்பட வேண்டும்.

சாரதி, பயணிகள், மற்றும் வாகனத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தைக் கண்காணிப்பதற்காக, பாதுகாப்பு கமெரா அமைப்புகள் நிறுவப்படவேண்டும்.

ஒரு தகுதியான நிரந்தர சாரதியும் மற்றும் சில உதவி சாரதிகளும் வாகனத்துக்காக பெயரிடப்படவேண்டும்.

ஒரு நாளில் நீண்ட தூரம் பயணிக்கும் பயணங்களுக்கு, நிரந்தர சாரதியுடன் கூடுதலாகப் பெயரிடப்பட்ட ஒரு உதவிச் சாரதி பணியமர்த்தப்படவேண்டும்.

ஒவ்வொரு நாளும் பயணம் தொடங்குவதற்கு முன், சாரதி ஒரு சரிபார்ப்புப் பட்டியலின்படி, வாகனத்தின் அடிப்படை ஆய்வுகளைச் செய்து, வாகனம் இயக்கத்திற்குத் தகுதியானது என்பதை சான்றளிக்க வேண்டும்.

புதிய சாரதிகள் பயணிக்கும் வீதிகள் மற்றும் அதன் அபாயகரமான பகுதிகள் குறித்து விழிப்புடன் இருக்க, பயணத்தைத் தொடங்குவதற்கு முன், ஒரு வழிகாட்டுதல் வரைபடத்தை அவர்களுக்கு காட்டவேண்டும்.

இதன் மூலம், சாரதிகள் அபாயகரமான பகுதியின் தூரம், வீதியின் தன்மை மற்றும் வளைவுகள் போன்றவற்றை முன்கூட்டியே புரிந்துகொள்ள முடியும் என்று நிபுணர் குழுவின் அறிக்கை பரிந்துரைக்கிறது. (அ)

# ஏற்றுமதி வருமானத்தை பல பில்லியன் டொலர்களாக அதிகரிக்க அரசு திட்டம்

கொழும்பு, செப். 24

இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானத்தை, 18 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பேராசிரியர் அருணா சாந்த ஆராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.